# பின்னிணைப்பு-1

# பின்னிணைப்பு-1

## சிவசங்கரி அவர்களிடம் பேட்டி-கடிதம் வழி*

1. தங்களின் முதற்படைப்பு சிறுகதையா? புதினமா? தலைப்பு என்ன?

எனது முதற்படைப்பு 'அவர்கள் பேசட்டும்' என்ற சிறுகதை.

2. தங்கள் படைப்பில் தங்களுக்கு மிகவும் திருப்தியளித்த சிறுகதை அல்லது புதினம் எது?

எனக்குத் திருப்தி ஏற்படாமல் எந்த விஷயத்தையும் எழுதுவதில்லை.

3. தங்கள் படைப்புகளைத் தானாகத் தனித்தன்மை கொண்டு படைக்கிறீர்களா? அல்லது யாரையேனும் முன்மாதிரி கொண்டு படைக்கிறீர்களா ?

கூடுமானவரையில் எவரையும் முன்மாதிரியாகக் கொள்வதில்லை. தவிர்க்க இயலாதபோது என்னைப் பாதித்தவர்களின் சாயலைக் கொண்டு வருவதுண்டு.

4. ஒரு புதினம் அல்லது சிறுகதையின் மொழிநடை எவ்வாறு இருக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் ?

புதினமோ, சிறுகதையோ எதுவானாலும் ஒரு தெளிவு இருக்க வேண்டும். எப்படி எழுத வேண்டும் என்கிற ஒரு தீர்மானமும், எழுதினது வாசகருக்குப் புரியவேண்டும் என்கிற நோக்கமும் இருக்க வேண்டும். இந்த வகையில் மகாகவி பாரதியாரின் கீழ்க்கண்ட வார்த்தைகளில் எனக்கு முழு உடன்பாடு.

"கூடிய வரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒருகதை அல்லது ஒரு தர்க்கம் ஒரு சாஸ்திரம் ஒரு பத்திரிக்கை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது."

5. பெண்களுக்கு இழுக்கு என்று எவற்றைச் சொல்லுகிறீர்கள்? இன்றைய பெண்களின் இழிவுநிலைக்கு எவை அல்லது எவர் காரணம்?

ஒரு நபருக்கு வேண்டிய மரியாதையைப் பெண்களுக்குக் கொடுக்காமல் இருப்பது தவறு, இழுக்கு. இந்நிலை மாறினால்தான் பெண் விடுதலை முழுமை பெறும். இதற்கு முழு சமுதாயமே காரணம்.

6. இன்றைய வாழ்க்கை முறையில் கூட்டுக்குடும்பச் சூழல் நல்லதா? தனிச்சூழல் நல்லதா? தங்கள் கருத்து என்ன?

கூட்டுக்குடும்பமோ, தனிக்குடித்தனமோ எதுவானாலும் நல்லதும் கெட்டதும் நிறைந்தவைதான். எனவே அவரவர்நிலை, மனம், வசதிக்கேற்ப அவரவரே தீர்மானிக்க வேண்டியவை இவை. இதுதான் நல்லது என்று எப்படி ஒன்றை மட்டும் குறிப்பிடுவது?

7. திருமண முறைகளில் காதல் திருமணம் பெற்றோர் ஏற்பாடு செய்யும் திருமணம் இரண்டில் எது சிறந்தது?

காதல் மணமோ பெற்றோர் ஏற்பாடு செய்த மணமோ எதுவானாலும் திருமணத்தின் வெற்றி சம்பந்தப்பட்ட அந்தப் பெண்ணிடமும் ஆணிடமும்தான் இருக்கிறது. பரஸ்பர அன்பு மரியாதை, அபிமானம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் மணவாழ்வு நிச்சயம் வெற்றியடையும். இவை இன்றி அமையும் வாழ்வு சிதையும் போது அந்த பாதிப்பு ஆண், பெண் இருவருக்கும் உண்டு. இவை தனி நபரைப் பொருத்து அமைகின்றனவே தவிர பொதுவான தீர்மானத்தைக் கூறுவது தவறு.

* (செ.சௌரிராஜ், சிவசங்கரி நாவல்களில் பெண்கள்,காவ்யா,1997.)